RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2438

OPEN ACCESS

# கரன்கார்க்கியின் ‘வருகிறார்கள்’ நாவலில் பெண்ணியம்

சா. பிரியா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசுக் கலைக்கல்லூரி, உடுமலைப்பேட்டை, தமிழ்நாடு, இந்தியா.

# Feminism in Karankarki's “Varugirargal” Novel

S. Priya [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Udumalpet, Tamil Nadu, India

* Corresponding Author: gukulmithran17@gmail.com

Received: 23-04-2024
Revised: 06-07-2024
Accepted: 10-07-2024
Published: 17-07-2024

Check for updates

## ABSTRACT

Women choosing their own rights is called Feminism. Feminism emerged when women became aware of their rights and freedom. Feminism can also be said to be free of action. For thousands of years, women have been tamed in the society and do not know how to open the lock and do not dare to come out even if they have the right key. The novel "Varugirargal" is written with the aim of changing the situation in which women are enslaved to men in modern times. In this modern era, women are acting with courage and self-confidence. They are working with the belief that they can easily solve any problem. It is a great admirable message that women will come and go against men in political and teaching field. This article explains all these things in detail through the novel "Varugirargal".

**Keywords:** Feminism, Varugirargal, Women, Society

## முன்னுரை

பெண்கள் காலந்தோறும் ஆண்களுக்கு அடிமைப்பட்டு கிடக்கின்ற நிலைமை தற்காலத்தில் மாற வேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்டவை தான் “வருகிறார்கள்” நாவல். இந்நாவலில் பெண்கள் ஐ.டி. துறை முதல் ஆசிரியர் துறை வரை அனைத்து துறைகளிலும் வருவார்கள் “வருகிறார்கள்” என்பதை தெளிவாக எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## பெண்ணியம் விளக்கம்

தனக்கான உரிமையை தானே தேர்ந்தெடுப்பது தான் பெண்ணியம். அடிமைப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் உருவானதே பெண்ணியம். பெண்ணியம் என்பது சுதந்திரமாய் செயல்படுவது என்றும் கூறலாம்.

“பெண்கள் அடைந்துள்ள
முன்னேற்றத்தின் அளவைக்
கொண்டே ஒரு சமூகத்தின்
முன்னேற்றத்தை அளவிடுகிறேன்” 1
(அம்பேத்கர்)
(அம்பேத்கரும் பெண்ணியமும்)

1927 ஆம் ஆண்டு அம்பேத்கர் பெண்ணியத்தை பற்றி பேசிய உரை ஆகும்.

சமூகத்தில் பெண்கள் விலங்கிடப்பட்டு உரிய திறவுகோல் கையில் இருந்தாலும் பூட்டைத்திறந்து வெளியில் வரத் தெரியாத தெரிந்தும் வரத் துணிவில்லாத பெண்ணினமாகவே பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்து வருகின்றார்கள்.

## சங்க காலத்தில்

"வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்" -2 (குறுந்தொகை 135 அடி 1-2)

என்று இருந்து வந்தனர். ஆனால் அந்த நிலை சிறுதுமாறி சில காலங்களுக்கு முன்பு அங்கொன்றும் இங்கொன்றுமாய் சில பெண்கள் விழிப்பு நிலை பெற்று தாம் பெற்ற விழிப்பு நிலையைத் தன்னிடம் முழுவதும் பறைசாற்றிப் பெண்ணினத்தின் அடிமை விலங்கை உடைத்தெறிய முற்பட்டார்கள். தற்பொழுது அனைத்து துறைகளிலும் சம உரிமைபெற்று புகுந்து விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள் பெண்கள். சமுதாயத்தில் அனைத்துப் பெண்களுக்கும் கல்வியும், வேலை வாய்ப்பும் அமைந்தால் மட்டுமே ஆடவரைச் சார்ந்து நிற்கும் நிலை அகன்று இணைந்து வாழும் நிலை உருவாகும்.

"பாதையில் கிடக்கும்

முட்களை அகற்றாமல்

பாவையரின்

பாதங்களுக்கு

லாடம் அடிப்பதோ?

பெண்ணைச்

சுமையாகக் கருதும்

சூழல்களை ஒழித்தால்

அவளை

இமையாத விழிகள்

ஏற்றுக்கொள்ளும் (மு. மேத்தா கனவுக் குதிரைகள்-ப-92)-3

இளவேனில் ஐ.டி. கம்பெனியில் பெரிய பொருப்பில் இருப்பினும் அவளது முதலாளி விஷ்வேஸ்வரன் அவள் மீது ஒரு கண்ணாகவே இருக்கின்றாள். சிங்கப்பூரில் பெரிய வேலை உனக்காக காத்திருக்கிறது. உனக்கு எவ்வளவு சம்பளம் வேண்டுமானாலும் கேள் எனக் கூறுகிறான். ஆனால் தன் சுயமரியாதைக்கு எந்த பங்கமும் வரக்கூடாது என நினைத்து எனக்கு இந்த வேலையே வேண்டாம் என்றும் தான் சொந்த தொழில் செய்யப் போவதாகவும் கூறுகிறாள். இளவேனிலைப்போல் அனைத்துப் பெண்களும் தைரியத்துடன் துணிந்து செயல்பட்டால் தான் சமுதாயத்தில் பெண்கள் போற்றப்படுவார்கள். மேலும் பெண் விடுதலை, கல்வி, வேலை வாய்ப்பின் தேவையினை குறித்து மு. மேத்தாவின்

"கல்வி வேலை வாய்ப்புகளில்

பெண்களுக்கோ முன்னுரிமை என்று

அருள் கூர்ந்து இயற்றுங்கள்

அவசரச்சட்டம்

மங்கையரே பிறக்க வேண்டும் என்று

பெற்றோர்

மாதவம் செய்வார்கள்-5" (மு. மேத்தா கனவுக் குதிரைகள் (ப.93)4

என்னும் கவிதை புலப்படுத்துகிறது ஆம் இளவேனில் போன்ற பெண்கள் பிறப்பதற்கு மாதவம் தான் செய்திட வேண்டும்.

## சமூகத்தில் விதவைப்பெண்

என்னதான் சமுதாயம் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் சென்றாலும் ஒரு கணவர் இறந்தபின் பெண்களின் நிலை மிக மோசமாக இருக்கின்றது ஒரு பெண்ணிற்கு அம்மா, அப்பா, அத்தை, மாமா, என அனைத்து உறவுகள் இறந்தாலும் கணவன் மட்டும் இல்லையென்றால் அவர்களுக்கு பல பெயர்களைச் சூட்டி சமுதாயத்தில் பின்னிற்கு தள்ளப்படுவதை நம் கண்முன்னே காண்கிறோம்.

மல்லிகாவின் கணவன் அதிகமான குடிப்பழக்கத்தினால் இறந்து விட்டான் என்று மருத்துவர் கூறியதும்" வாழும் ஆசையை கண்களிலேயே தேக்கி வைத்திருக்கும் முகத்தையும், அதன் துயரையும் பார்க்க முடிந்தது மல்லிகாவின் முகத்தில் -5 (வரு.ப. 135) தன் வீட்டு மாடியில் இருக்கும் மகிழன் மீது ஒருவிதமான காதல் மல்லிகாவிற்கு இருவரும் வெளிப்படுத்தாமலே கண்களில் மட்டுமே உரையாடுகிறார்கள்.

இளவேனில் அம்மாவை பார்க்க போன மல்லிகாவின் கழுத்தில் தான் அணிந்திருந்த சங்கிலியை கழற்றி இளவேனில் போடுகிறாள். அதற்கு மல்லிகா "பாக்கறவங்க தப்பா நெனைப்பாங்க" என்று மல்லிகா தரையைப் பார்த்துக் கொண்டு சொன்னாள்-6 (வ.ப. 234) சமூகத்தில் கணவனை இழந்த பெண்கள் பூ, பொட்டு, வளையல், செயின் என எதுவும் அணியக்கூடாது என்ற பழக்கம் சங்ககாலம் தொட்டே இருந்து வருகின்றது. இந்த நிலையினை மாற்றவே ஆசிரியர் மகிழனுக்கும் மல்லிகாவுக்கும் காதல் ஏற்படுமாறு எழுதியிருப்பது சமூகத்தின் பெண்களின் வாழ்க்கை மாற்றத்தை புலப்படுத்துகிறது.

மகிழன் மல்லிகாவிற்கு ஐந்து லட்சம் பணத்தை கொடுத்து தொழில் தொடங்கு என்கிறான். அதை வாங்கி மக்கள் நகலகம் என்ற கடையை ஆரம்பித்து தொழிலில் முன்னேறுகிறாள் மல்லிகா. கணவனை இழந்த பெண்கள் ஒரு மூலையில் முடங்கிக் கிடக்காமல் துணிந்து சமுதாயத்தில் அனைத்து தொழில்களிலும் புகுந்து தன் நிலைமையினை மாற்றிக் கொண்டும் தனக்குப் பிடித்த வாழ்வினை தேடிக்கொள்ளவும் வேண்டும்.

விதவைப் பெண்ணொருத்தியை ஆண் விரும்பித் திருமணம் செய்து கொள்ளப் போவதாகக் கூறுவது பாரதிதாசன் புரட்சி உள்ளததையும், பெண் விடுதலைக்காக அவர் கொடுக்கும் குரலும் பெண்கள் மேம்பாட்டிற்கு வழிவகுக்குகின்றது என்று கருதலாம்.

"காதல் அடைதல் உயிரியற்கை - அது

கட்டில் அகப்படும் தன்மையதோ -அடி

சாதல் அடைவதும் காதலே -ஒரு

தடங்கல் அடைவதும் ஒன்று கண்டாய் -இனி

நீதடு மாற்றம் அகற்றிவிடு -கை

நீட்டடி சத்தியம் நான் மணப்பெண் அடி

தோளை தொடாதுகடி என்று சொன்னான் -7 (பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 1-11)

துணிச்சல் மிக்க புதுமைப்பெண்

துணிச்சல் மிக்க புதுமைப் பெண்ணாக இந்நாவலில் இளவேனில் என்ற கதாபாத்திரத்தை அறிமுகம் செய்துள்ளார் ஆசிரியர் அரசியல் குறித்தோ, இயக்கங்கள் குறித்தோ, எந்த விழிப்புணர்வும் இல்லாதவர்கள் தான் பெரும்பாலான பெண்கள் ஆனால் நாவலில் இடம்பெறும் இளவேனில் பெண்களுக்கான ஒரு முன்மாதிரிக் (Role Model) கதைமாந்தர், தெளிவு நேர்மை, மென்மை, உறுதி, இலட்சியம் முதலியவற்றின் மொத்தவடிவம்.

யாரிடமும் இவள் அடிபணிவதில்லை யாரிடமும் மண்டியிடுவதில்லை முற்போக்கு என்றால் என்ன என்பதைத் தன் தாய் ஸ்வர்ணாவிற்குப் புரியவைக்க முற்படுகிறாள். வெளிநாட்டுப் பயணங்களுக்காகத் தக் குறிக்கோளையோ, காதலையோ விற்பதற்கு இவள் தயாரில்லை பணத்திற்கு அடிபணிய மறுக்கும் பிடிவாதக்காரி அரசியல் தெரிந்தவள் போராட்டம் என்றால் என்ன என்பதை உயர்ந்தவள் எவ்வளவு வன்மை உண்டோ அவ்வளவு மென்மையும் உண்டு காதலை ஒரு போதும் புனிதமாகம் போற்றியவளில்லை ஆனால் "உள்ளம்" முழுவதும் அன்பினாலும், காதலினாலும் நிறைந்தவள் வாழ்க்கை குறித்து தெளிவு நிறைந்த பெண்தான் இளவேனில் 8 (வ.ரு.ப.9) இத்தகைய மாந்தர்கள் இலக்கியங்களிலாவது நமக்கு தேவை என்பதை தெளிவாக காட்டியுள்ளார் இளவேனில் கதாபாத்திரத்தின் மூலம் நாவலாசிரியர்.

## முடிவுரை

நவீன காலமாகிய இக்காலத்தில் பெண்கள் துணிச்சலுடனும் தன்னம்பிக்கையுடனும் செயல்பட்டு வருகின்றனர். (வருகிறார்கள்) எதையும் தன்னால் சாதிக்க முடியும் என்ற துணிச்சலுடன் செயல்பட்டு வருகிறார்கள். ஆண்களை எதிர்த்துப் போராடும் அளவிற்கு இக்காலப் பெண்களுக்கு சுதந்திரமும், சம உரிமையும் கிடைத்துவிட்டது. தங்களால் எவ்வித பிரச்சனைக்கும் எளிதில் தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கையுடன் செயல்பட்டு வருகிறார்கள். பெண்கள் ஆசிரியத்துறை முதல் அரசியல்துறை வரை ஆண்களுக்கு எதிராக வருகிறார்கள் வந்து கொண்டே இருப்பார்கள் என்று "வருகிறார்கள்" நாவலின் மூலம் நமக்கு விளங்வைத்தது பெரும் போற்றுதலுக்கு உரி செய்தி ஆகும்.

## References

கரன்கார்க்கி, (2016) வருகிறார்கள் நாவல், பாரதி புத்தகாலயம், சென்னை

பாலசுப்ரமணியம், சி. (2010) தமிழ் இலக்கிய வரலாறு குறுந்தொகை, கவிதா வெளியீடு, சென்னை

பாவேந்தர் பாரதிதாசன் (2023) பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள் தொகுதி, பூம்புகார் பதிப்பகம், சென்னை

மேத்தா, மு. (2012) கனவுக்குதிரைகள், கவிதா வெளியீடு, சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License